பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 13 வியாழக்கிழமை (29-10-1992) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 336

# வலி வடக்கு, வலி மேற்கு நோக்கி நள்ளிரவில் அகோர ஷெல் தாக்கு!

## கும்மிருட்டில் குடும்பங்கள் சாரி சாரியாக இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், அக்டோபர் 29

வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை அகோர ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஸ்ரீலங்காஇராணுவ முகாம்களிலிருந்து சீறி வந்த ஷெல்கள் பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்ததை அடுத்து பீதியடைந்த பொதுமக்கள், நித்திரைப் பாயிலிருந்து வாரிச் சுருட்டிக் கொண்டு சாரி சாரியாக இடம்பெயர்ந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் — மக்கள் உறங்கத் தொடங்கிய வேளையில் — திடீர் ஷெல் தாக்குதல் ஆரம்பமானது.

மூளாய், தொல்புரம், சுழிபுரம், வண்டத்தரிப்பு, சித்தன்கேணி, நிற்சாமம், தொட்டிலடி, இளவாலை, விளான், அளவெட்டி, தம்பளை ஆகிய பகுதிகளில் ஷெல்கள் அடுத்தடுத்து விழுந்து வெடித்தன.

கூவிக்கொண்டு வந்த ஷெல்களின் சத்தத்தையும், அவை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## மண்எண்ணெய் வந்த படகு தீப்பிடித்து கடலில் மூழ்கியது

### கிளாலிப் பகுதியில் மீண்டும் தாக்குதல்

தென்மராட்சி, அக். 29

பொருள்களை ஏற்றி வந்த படகுகள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்திய சம்பவம் கிளாலிப் பகுதியில் மீண்டும் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு ஆலங்கேணியிலிருந்து அல்லைப்பனை நோக்கி வந்த இரு படகுகளே தாக்குதலுக்கு உள்ளாகின.

இத்தாக்குதலின்போது மண்ணெண்ணெய் ஏற்றி வந்த படகு தீப்பற்றி எரிந்து கடலில் மூழ்கியது. மற்றைய படகு நேற்றுக்காலை அறந்திநகர் கடற்கரையை அடைந்தது.

தீப்பிடித்து நீரில் மூழ்கிய படகைச் சேர்ந்த படகோட்டிகளில் ஒருவரான மருதங்கேணி, வத்திராயனைச் சேர்ந்த நவம் (25 வயது) என்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் சுட்ட போது நீரில் பாய்ந்து தப்பினோம்

### படகோட்டி ஒருவர் தகவல்

தென்மராட்சி, அக். 29

ஆலங்கேணியில் இருந்து மண்எண்ணெய் ஏற்றிக் கொண்டு வந்த படகில் நானும், நவம் என்பவரும் இருந்தோம். நெல் ஏற்றிவந்த மற்றைய படகில் கட்டைக்காட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் வெனிஸ்லாஸ், வெனிஸ்லாஸ் ஞானம் ஆகியோர் இருந்தனர்.

எமது படகுகள் நடுக் கடலில் வரும்போது ஆனையிறவு முகாம் பகுதியில் இருந்து விசைப்படகு ஒன்று வந்தது. அதில் இருந்த கடற்படையினர் எமது படகுகளை நோக்கிச் சுட ஆரம்பித்தனர். நான் கடலில் பாய்ந்து நீரில் மூழ்கி சிறிது தூரம் சென்று மேலே வந்து பார்த்தபோது மண்எண்ணெய் ஏற்றிவந்த எனது படகு எரிந்துகொண்டிருந்தது.

மருதங்கேணி, வத்திராயனைச் சேர்ந்த மு. அழகன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் குண்டுவீச்சு தொடருமாம்

கொழும்பு, அக். 29

வடமாகாணத்தில் கடந்த பத்து தினங்களாக விமானப் படையினர் தொடர்ந்து நடத்தி வரும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் தொடர்ந்தும் சில தினங்கள் நீடிக்கலாம் என்று கூறப்படுகின்றது.

குறிப்பாக பருத்தித்துறை மற்றும் தொண்டமானாறு பகுதிகளில் இக்குண்டு வீச்சுகள் நடந்துள்ளன என்றும்—

குண்டு வீச்சு நடத்தப்படும் இடங்களில் வாழும் பொது மக்களுக்கு இது குறித்து ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது என்றும் இராணுவம் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஆறு மாத காலங்களில் விடுதலைப் புலிகள் தமிழ் துணிகரத் தாக்குதல்கள் மூலம் முன்னணி பெறுவதால் அதற்குப் பதிலடி தரும் விதத்தில் இராணுவம் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் ஈடுபடத் தொடங்கியிருக்கலாம் என்று சில அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-162-5)

## வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து நேரடியாக மருந்து உதவி பெற தடை

### பிராந்திய பணிப்பாளருக்கு சுகாதார அமைச்சு உத்தரவு

யாழ்ப்பாணம், அக். 29

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் இனிமேல் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களிடம் இருந்து மருந்து வகைகள் மற்றும் வைத்திய உபகரணங்களை நேரடியாக உதவியாகப் பெற முடியாது.

அவ்வாறு உதவி பெறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சுகாதார, மகளிர் விவகார அமைச்சு இத்தடை விதிப்புச் சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்றைச் சகல பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

பிரஸ்தாப அமைச்சின் செயலாளர் டாக்டர் ஜோ பெர்னாண்டோ ... யூலை 1765 ஆம் இலக்கச் சுற்று நிருபத்தில், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களிடம் இருந்து பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்கள் எந்தவித உதவியையும் நேரில் பெறக்கூடாது என்று ... நாட்டில் உள்ள பல பிராந்திய ...

## ரி. வியில் மறைத்து வைத்த குண்டு வெடித்து ஒருவர் பலி

### மட்டக்களப்பில் சம்பவம்

கொழும்பு, அக். 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான மின் உபகரணங்கள் விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று குண்டு ஒன்று வெடித்ததில் குறைந்தது ஒருவர் உயிரிழந்தார் என்றும் —

ஒருவர் படுகாயம் அடைந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தொலைக்காட்சியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்றே வெடித்ததாக கூறப்படுகிறது. (இ-எ)

### நாள் ஒன்றுக்கு 8 பேர் வீதம்

## முதல் 9 மாதங்களிலும் 827 படையினர் பலி!

கொழும்பு, அக். 29

இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மட்டும் 827 படையினர் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டனர் என்று கூட்டு நடவடிக்கைகள் கட்டளைப் பீடம் (ஜே ஓ சி) தெரிவித்துள்ளது.

மாதாந்த ரீதியில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை விபரத்தையும் கூட்டுப்படைகள் கட்டளைப்பீடம் வெளியிட்டிருக்கிறது.

அவ்விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ஜனவரி | — | 86 |
| பெப்ருவரி | — | 71 |
| மார்ச் | — | 135 |
| ஏப்ரல் | — | 40 |
| மே | — | 97 |
| ஜூன் | — | 78 |
| ஜூலை | — | 167 |
| ஆகஸ்ட் | — | 57 |
| செப்டெம்பர் | — | 97 |

தினமும் சராசரி 8 படையினர் என்ற வீதத்தில் படையினரின் உயிரிழப்பு இருந்து வருவதாக சண்டே ரைம்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

## இரண்டு மாதங்களில் மட்டும் 1,298 படையினர் ஓட்டம்

யாழ்ப்பாணம், அக். 29

கடந்த ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் மட்டும் ஆயிரத்து 298 படையினர் ஸ்ரீலங்கா இராணுவத்திலிருந்து அறிவிக்காமல் விலகி ஓடிவிட்டனர்.

ஸ்ரீலங்கா இராணுவத் தலைமையக சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டு மட்டும் 4 ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் இராணுவத்திலிருந்து விலகியுள்ளனர்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்டு - 6 அனுமதிக்கு இரு பொதுப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், அக். 29

யாழ். கல்வி மாவட்டத்தில் ஆண்டு - 6 அனுமதிக்கான போட்டிப் பரீட்சைகள் அடுத்த மாதம் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் பொதுவாக நடத்தப்பட உள்ளன.

பிரபல்யம் பெற்ற 25 பாடசாலைகளில் அனுமதி பெறும் மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுவான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 14 ஆம் திகதியும்—

யாழ். இந்து, வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய இரு தேசிய கல்லூரிகளுக்கும் அனுமதி பெறும் மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 15 ஆம் திகதியும் நடைபெற உள்ளன.

(5 ஆம் பக்கம் பார்க்க)

### கொக்கட்டிச்சோலை படுகொலை:

## ராணுவ அதிகாரி குற்றவாளி

கொழும்பு, அக். 29

கொக்கட்டிச்சோலையில் 67 தமிழ்ப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் இராணுவ அதிகாரி லெப்டினன்ட் எச். ஐ. எச். குடவிதான குற்றவாளி என்று இராணுவ நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

தனது அணியில் பணிபுரிந்த இராணுவத்தினர் தங்களது ஆயுதங்களை பொதுமக்களைப் படுகொலை புரிய பயன்படுத்த லெப்டினன்ட் குடவிதான அனுமதித்தார் என்பது தற்போது நிரூபணமாகியிருப்பதாகவும் இராணுவ நீதிமன்றம் கூறியிருக்கிறது.

ஆனாலும், இந்த அதிகாரிக்குரிய தண்டனை இதுவரை வழங்கப்படவில்லை என்று செய்தி ஒன்று சுட்டிக்காட்டியிருப்பதாக ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்தது.

### விமான ஓட்டம் அதிகரிப்பு

வழமைக்கு மாறாக நேற்று யாழ். குடாநாட்டுப் பகுதியில் விமான ஓட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.

நேற்றுப் பகலும் இரவும் விமானங்கள், பலாலி நோக்கிச் செல்வதும் பலாலியில் இருந்து திரும்புவதாகவும் இருந்தன. (இ-126-3-15)

காட்டினில் மரங்களைத் தறிக்காதீர்
நாட்டினில் வளங்களைக் குறைக்காதீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வழங்குனர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 1993

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவுசெய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1992 டிசம்பர் 15 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

### வழங்கல்கள்:

01. எழுது பொருள்கள்
02. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம் - மரம்
04. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல் அலுமாரி, கபினேட்டுகள் முதலியன)
05. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
06. சகலவகை ஹார்ட்வெயார் பெயின்டுகள், வார்னிஷ்
07. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
08. மின்சார சாதனமும், உதிரிப்பாகங்களும்
09. வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்
10. ஜவுளிகள், யன்னல் திரைச்சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப்பொருள்களும் கண்ணாடிப் பொருள்களும்
12. மரம்
13. கட்டடப்பொருள்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. தும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புகள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணையுறுப்புகளும்
17. ஆயுள்வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருள்கள்
20. தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்பு சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன
22. பைப்புகளும், பைப் இணைப்புக்களும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப் பொருட்கள், கண்ணாடிப் பொருள்கள், கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புக்கள்

### சேவைகள்:

1. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
2. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்
3. குளிர்சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள், திருத்த வேலைகளும் பராமரிப்புக்களும்
4. ஸ்டீல் தளபாடங்களின் திருத்த வேலைகள்
5. மரத் தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்
6. கதிரைகள், பின்னல்
7. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்
8. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்டிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
9. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் 'பைண்டிங்' செய்தல்

### எந்திரவியல் சேவைகள்:

1. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
2. மின்மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
3. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்)
4. மின்சார வயறிங் வேலைகள்
5. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள்/ திருத்த வேலைகள்
6. இரும்பு கிறில்கள் / கேற்றுகள் உருவமைத்தல்/ பொருத்துதல்
7. கட்டடங்கள் / கட்டட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
8. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல் / பொருத்துதல்

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள்/சேவைகள் 1993' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல் / சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக் கட்டணமாக ரூபா 150/- பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும், ஆயினும் வேறு நபர்களிடமிருந்தும் விலை மனுக்களைக் கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும் பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்களை, சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
2. பெயரும் விலாசமும்
3. தொலைபேசி இலக்கம்
4. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
5. வியாபாரத்தின் தன்மை
6. பங்காளர்களின் பெயர்
7. கிடைக்கக் கூடிய கடன் வசதிகள்

குறிப்பு:

பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து பின்வரும் தகவல்கள் கோரப்படுகின்றன.
எந்திரவியல் சேவை 3க்கு பின்வருவோர் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

(அ) ICTAD தரப்படுத்தலின் கீழ் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம் / கூட்டுத்தாபனம் / சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின் போட்டோப் பிரதி / அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

(ஆ) ஏனையோர் ICTAD / ID / 02 (இரு பிரதிகள்) ICTAD / ID / 01 ஐயும் ICTAD 123 விஜயராம மாவத்தை, கொழும்பு - 7 என்ற முகவரியில் இருந்து கொள்வனவு செய்து அதற்கேற்ப விண்ணப்பிக்க வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி / வவுனியா மாவட்டங்களில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். அத்துடன் அம்மாவட்டங்களில் உள்ள தமது கிளை / பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்துக்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

உங்கள் தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக் கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களைத் (7 இற்கு மட்டும்) தருக.

- பதிவாளர்.

[கி-3625]

---

## சிறப்புச் சொற்பொழிவு

பொருள்:- கந்தசஷ்டி விரத தத்துவம்

இடம்: வண்ணை சிவன் கோவில்

காலம்: 29 - 10 - 1992 வியாழக்கிழமை
30 - 10 - 1992 வெள்ளிக்கிழமை
பி. ப. 4-30 மணி

சொற்பொழிவாளர்:- திரு. த. சிவகுமாரன்
[ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி]

- ஆலய பரிபாலன சபை.
திருக்கோவில்.

விளம்பர அன்பளிப்பு: சிவனடியார்.

[கி-3739]

---

## கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி
## ஆண்டு-6 அனுமதி பெறுவதற்கான
## பிரவேசப் பரீட்சை - 1993


மேற்படி பரீட்சை 14 - 11 - 1992 சனிக்கிழமை நடைபெறும். இதற்கான விண்ணப்பப்படிவத்தை 10/- செலுத்தி அலுவலகத்தில் 06 - 11 - 1992 க்கு முன் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்,
த. முத்துக்குமாரசாமி,

(23065)

---

## 1st DEATH ANNIVERSARY



| Born | Called to Rest |
|---|---|
| 12 | 29 |
| 03 | 10 |
| 1916 | 1991 |

**PHILIP LIGORY SANTIAGO**
(Retd. Assist - Conservator of Forest)

"A Loving Father you had been
Many a Trouble you had seen
To each one of us you did your best
May God grant you eternal rest"

Wife, Children.
& Grand Chidren.

45/1 Stanley College lane
Jaffna.

(23067)

---

## உற்சவங்கள்

யாழ்ப்பாணம், அக். 29
வல்வெட்டித்துறை சிவன் கோவிலில் நடைபெற்று வரும் கந்தசஷ்டி விழாவில் இன்று கானகதாமாநிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார். ''வேலைக் கையில் ஏந்திய வேலவன்'' என்ற பொருளில் இன்னிசை விரிவுரை அமையும்.

★ ★ ★

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இன்று பிற்பகலில் சதுர்த்தித் திருவிழாவையொட்டி விசேட அபிடேகம், வசந்த மண்டபப் பூசை, வீதி உலா என்பன இடம் பெறும். (ஆ)

---

## இரண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையிலேயே விலகி ஓடிய இராணுவத்தினரை மன்னித்து அவர்களை மீண்டும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள ஸ்ரீலங்கா அரசு தீர்மானித்துள்ளது.

அத்துடன் ஸ்ரீலங்கா இராணுவத்தில் புதிதாக நான்கு பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிதாக ஆட்கள் படையில் சேர பின்னடித்து வருவதாலும்—

இராணுவத்தில் ஆட்பற்றாக்குறை நிலவுவதாலும்—

புதிதாக அமைக்கப்பட்டுள்ள நான்கு படையணிகளையும் இயக்க முடியாதிருக்கிறது.

இதன் காரணமாக ஓய்வு பெற்ற படையினரைக்கூட படைகளில் சேர்த்துக் கொள்ள ஸ்ரீலங்கா இராணுவத் தலைமையகம் தயாராக உள்ளது.

இவ்வாறு அந்தப் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவிக்கிறது. (இ-5)

---

## வலி - வடக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடித்தபோது ஏற்பட்ட பலத்த அதிர்வையும் கேட்டு பீதியுற்ற மக்கள் நித்திரைப் பாயிலிருந்து வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு சாரிசாரியாக இடம் பெயர்ந்தனர்.

வலி. வடக்கு, வலி. மேற்கு பகுதிகளில் படையினர் நிலை கொண்ட பகுதிகளை அண்டி பரா வெளிச்சக் குண்டுகளும் ஏவிவிடப்பட்டன, அப்பகுதிகளில் துப்பாக்கி வேட்டுகளும் அடிக்கடி கேட்டன.

அளவெட்டி மேற்கு தம்பளை விக்னேஸ்வரா சனசமூக நிலையத்துக்கு அருகில் உள்ள வீடு ஒன்றின் மீது விழுந்த ஷெல்லினால் அந்த வீடு முற்றாக நாசமானது. தெய்வாதீனமாக அவ்வீட்டில் அவ்வேளை எவரும் இருக்காததால் உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

மற்றொரு ஷெல் காட்டுப்புலம் தோட்ட வெளியில் விழுந்து வெடித்தது.

தம்பளை தோட்டப் பகுதியில் வெடிக்காத நிலையில் ஒரு ஷெல் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மூளாய் பிள்ளையார் கோயிலுக்குப் பக்கமாகவுள்ள வளவு ஒன்றிலும், சுழிபுரம் வெளி வளவிலும், பனிப்புலம் வயல் வெளியிலும், பண்டத்தரிப்பு வளவு ஒன்றிலும் ஷெல்குண்டுகள் விழுந்து வெடித்தன.

நேற்று அதிகாலை வரை இத்தாக்குதல் தொடர்ந்தது.

பின்னர் நேற்றுக் காலை தாக்குதல்கள் ஓய்ந்ததை அடுத்து, இடம் பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர் தமது இடங்களுக்குத் திரும்பினர்.

இதே வேளை—

நேற்று முன்தினம் இரவு மண்டைதீவு, அராலித்துறைப் பகுதிகளில் இருந்தும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. (உ-13-15-28-68-162)

---


## சுபேன்
### கல்வி நிறுவனம்
(ஞானம் ஸ்ருடியோ அருகாமை)

## A/L கம்பனி
பங்கு வழங்கல்

ஆரம்பம்: 1992-10-29
வியாழன் மாலை-4 மணி
ஆசிரியர்: D. SAM

(23051)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலைகளை நிறுத்த அரசின் நடவடிக்கை என்ன?

## "சண்டே ரைம்ஸ்" கேள்வி

கொழும்பு, அக். 29

நாட்டில் இடம்பெற்று வரும் படுகொலைகளை முடிவுக்குக் கொண்டுவர என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இராணுவ மற்றும் அரசியல் முயற்சிகள் இன்று எந்தளவில் உள்ளன என்பது பற்றி "சண்டே ரைம்ஸ்" அரசியல் செய்தியாளர் எழுதிய கட்டுரை ஒன்றில் இவ்வாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசு இராணுவத் தீர்வை நோக்கிச் செல்கின்றதா? அல்லது அரசியல் தீர்வை நோக்கிச் செல்கின்றதா? தற்போதைய நிலையில் எந்த வழியில் அரசு செல்கிறது என்பது தெளிவாக இல்லை.

சிங்களத் தரப்பில் உள்ள அழுத்தக் பிரயோகிக்கும் குழுக்களைத் தவிர்த்து ஏனைய தமிழ்க் குழுக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தீர்வைக் கொண்டுவர முடியாத நிலையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

ஒரு பக்கத்தில் தனிநாடு வேண்டும் என்று கோரி விடுதலைப் புலிகள் சண்டையிட்டு வருகின்றனர். இன்னொரு பக்கத்தில் படையினரின் இராணுவ நடவடிக்கைகளின் தீவிரம் குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு 'சண்டேரைம்ஸ்' அரசியல் செய்தியாளர் தெரிவித்திருக்கிறார். (த-எ)

## உயர் நீதிமன்றம் இக்கட்டான நிலையில்

கொழும்பு, அக். 29

அண்மையில் தள்ளுபடி செய்யப்பட்ட ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு தொடர்பாக மனுதாரர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா செலுத்த வேண்டிய வழக்குச் செலவு பற்றி தீர்மானிப்பதில் உயர் நீதிமன்றம் இக்கட்டான நிலைக்கு ஆளாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி பிரேமதாசா சார்பில் சட்டத்தரணி எஸ். சுந்தரலிங்கம் உயர் நீதிமன்றப் பதிவாளரிடம் அண்மையில் சமர்ப்பித்த கோரிக்கையில் —

திருமதி பண்டாரநாயக்கா 82 லட்சத்து 14 ஆயிரத்து 11 ரூபா செலவுத் தொகையாக செலுத்த வேண்டும் என்று கோரியிருந்தார்.

ஆனால் ஜனாதிபதியின் சார்பாக ஆஜரான பிரதம வழக்கறிஞர் கே. என். சொக்ஸி உயர் நீதிமன்ற பிரதம நீதியரசருக்குச் சமர்ப்பித்த கோரிக்கையில் —

6 லட்சத்து 78 ஆயிரம் ரூபா செலவுத் தொகையாக வழங்கப்பட வேண்டும் என கோரியுள்ளார்.

சட்டமா அதிபர் சார்பிலும் செலவுத் தொகை கோரிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வழக்குச் செலவுத் தொகையை நிர்ணயிப்பது குறித்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சட்டத்தரணியுடன் உயர் நீதிமன்றம் ஆலோசனை நடத்தும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## பிரதமர், ஹமில்டன் மட்டக்களப்புக்கு விஜயம்

கிழக்கில் பாதுகாப்பு நிலைமையை ஆராய பிரதமரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு டி. பி. விஜேதுங்கா நேற்றுமுன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார். கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவும் அவருடன் கூடச்சென்றிருந்தார்.

மட்டக்களப்பு வெல்லாவெளியில் கடந்த சனிக்கிழமை கொல்லப்பட்ட பத்துத் தமிழ் மக்களின் மரணம் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படும் என அவர் அங்கு உறுதியளித்தார். (ஒ-த)

## தலைமை பதவியை கைவிட சிறிமாவின் நிபந்தனை!

கொழும்பு, அக். 29

சுதந்திரக் கட்சி பாதுகாப்பானவர்களின் கைகளில் இருக்கிறது என்ற நம்பிக்கை ஏற்படும் போது தான் நான் கட்சித் தலைமைப் பதவியை கைவிடுவேன்.

76 வயதான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா "சண்டே ரைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார். (உ-எ)

---

யாழ். கனகரத்தினம்
மத்திய மகா வித்தியாலயம்

### ஆண்டு - 6 அனுமதி - 1993

விண்ணப்ப முடிவு திகதி: 10 — 11 — 1992

விண்ணப்பப் படிவங்கள் 01 - 11 - 1992 முதல் கல்லூரி அலுவலகத்தில் வழங்கப்படும். வேறு விண்ணப்பப் படிவங்கள் / பிரதிய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

பரீட்சை நாள்: 14 — 11 — 1992

பாடங்கள்: 1. தமிழ்
2. கணிதம்

கட்டணம்: ரூபா 30/-

மு. இராமலிங்கம்,
அதிபர்.

(23062)

---

### தேவை

யாழ் நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரபல வியாபார ஸ்தாபனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உண்டு.

1. அனுபவமும் திறமையும் உள்ள விற்பனையாளர்கள் தேவை (ஆண்கள்)
2. கணக்குத் துறையில் ஓரளவு அனுபவம் கொண்ட பெண் காசாளர் தேவை.

யாழ். நகர எல்லைக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நேரில் தொடர்பு கொள்ளவும்.

இல. 234, K. K. S ROAD,
யாழ்ப்பாணம்.

(சி-3746)

---

### நில அளவையாளர்கள் கலந்துரையாடல்

நில அளவை மேற்கொள்ள விரும்பும் அனுமதிப் பத்திரம் பெற்ற, அனுமதிப் பத்திரம் பெறாத பயிற்சி பெற்ற நில அளவையாளர்கள் மற்றும் வரைபட வரைஞர்களுக்கான கலந்துரையாடல்.

| திகதி | | காவல் பணிமனை | நேரம் |
|---|---|---|---|
| 29 - 10 - 1992 | — | யாழ்ப்பாணம்<br>சங்கானை | 9-00 மு. ப.<br>3-00 பி. ப. |
| 30 - 10 - 1992 | — | சுன்னாகம்<br>கோப்பாய் | 9 00 மு. ப.<br>3-00 பி. ப. |
| 31 - 10 - 1892 | — | வல்வெட்டித்துறை<br>பருத்தித்துறை | 9-00 மு. ப.<br>3 00 பி. ப. |
| 01 - 11 - 1992 | — | சாவகச்சேரி<br>பளை | 9-00 மு. ப.<br>3-00 பி. ப. |

பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

(சி-3636)

---

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவன
மாணவர் மன்றத்தினர் நடத்தும்
சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும்

### ★ புகைப்படக் கண்காட்சி ★

இடம்: நிறுவன வளாகம், வட்டுக்கோட்டை

காலம்: இன்று 29-10-1992 — 31-10-1992 சனிக்கிழமை வரை
காலை 9-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை.

அன்பளிப்பு: ரூபா 10/-
ரூபா 5/- (மாணவர்களுக்கு)

(23067)

---

### ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 25 — 06 — 1968

விண்ணில்: 10 — 11 — 1991

### செல்வி கந்தசாமி கிஸ்ணகுமாரி

திதி: 1992 — 10 — 29

ஓராண்டு சென்றாலும் மறவாதே உம் நினைவு
இராசாத்தி
பல ஆண்டு சென்றாலும் மாறாதே உம் நினைவு
இராசாத்தி
எம்மை ஆழ்கடலில் ஆழ்த்திவிட்டீரே இராசாத்தி
உம்மை இழந்து பரிதவிக்கின்றோம் இராசாத்தி
உம் நினைவுதான் எப்பொழுதும் எங்களுக்கு
இராசாத்தி
உம் ஆத்மா சாந்திபெற இறைஞ்சுகின்றோம்
இராசாத்தி

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அப்பா, அம்மா, அக்கா அண்ணர்,
தம்பி, நண்பர், உற்றார்,
உறவினருக்காக ஏ. சி. கந்தசாமி.

75, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(23064)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட பீற்றூட், கறிமிளகாய், கரட் விதைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பிள்ளையார், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். சனி, ஞாயிறு தினங்களில் வீட்டிலும் பெறலாம். 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். [23042]

### தேவை

அச்சகத்திற்கு கொம்போசிங், பைண்டிங் வேலைகள் தெரிந்த பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். திருவள்ளுவர் அச்சகம், 593, பருத்தித்துறை வீதி, நல்லூர். (யாழ் மாநகரசபை அருகில்) [23036]

உரும்பராயில் இயங்கவிருக்கும் ஆங்கில மருந்தகம் (Pharmacy) ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த பெண் விற்பனையாளரும், வேலை பழகக்கூடிய பெண்களும் உடன் தேவை. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். English Pharmacy Urumpirai. [5519]

### தங்குமிடம் தேவை

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இருவர் தங்குவதற்கு வசதியான இரண்டு அறைகள் வேண்டும். உடன் தொடர்பு கொள்ளவும். இ. சங்கர், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [கி-3728]

### இடம்மாற்றம்

வேலணையூர் நடனமுருகன் வைத்திய நிலையம், யாழ். சத்திரச் சந்தி, கொம்படி றோட்டிற்கு இடம் மாற்றப்பட்டு இயங்கி வருகின்றது. டாக்டர். சுந்தரயா நவரத்தினம். [5513]

### தவறிவிட்டது

இந்திராணி கந்தசாமி ஆகிய எனது 715061988 V இலக்கத்துடைய தேசிய அடையாள அட்டை திருநெல்வேலிக்கும், கல்வியங்காட்டிற்கும் இடையில் 26-10-92 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சட்டநாதர் சிவன் கோயில் கணக்காளரிடம் ஒப்படைக்கவும். (23060)

### G. C. E. O/L

கடந்த கால வினா-விடை புத்தகம் சகல பாடங்களுக்கும் குறைந்த விலையில் விற்பனையாகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்திக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். (கி-3726)

### சோதிடம்

விவாகத்தடைகள், கல்வித் தடைகள், தொழில் தடைகள், குடும்பப் பிரச்சினைகள், தீராத கஷ்டங்கள் நீங்க அதிர்ஷ்டம் அளிக்கிறது சாதகத்துடன் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மாணிக்க விநாயகர் சோதிட நிலையம், ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி, நல்லூர். (23046)

### அறைகள் வாடகைக்கு

பல்கலை. மாணவர்கள் தங்குவதற்கு சாப்பாட்டுடன் அறைகள் உண்டு. நேரில் வரவும். சவோய் ஹோட்டல், இல 8, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரிக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம் (5527)

## உடுவில் மகளிர் கல்லூரி

(தொடர் கல்வி நிலையம்)

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

(யாழ்ப்பாண பல்கலைக் கழகம்)

- B. A. (Part I) 2 ஆம் வருடம்
- G. A. Q. புதிய பிரிவு

**ஆரம்பம்:- 02 - 11 - 92**

எமது விரிவுரையாளர் குழு:-

திரு. S. வரதராஜன் B. A. (Hons)
திரு. N. குழந்தைவேல் B. A (Hons)
திரு. S. S. மனோகரன் B. Com.
திருமதி பவசிங்கம் B. A. (Hons)
திரு. K. செல்வரட்ணம் B. A. (Hons)
திரு. தெய்வதவபாலன் Dip - in - Eng.

நிர்வாகி.

(கி/3630)

## யாழ். மத்திய கல்லூரி
## ஆண்டு - 6 அனுமதித் தேர்வு-1993

இத்தேர்வு 14 - 11 - 1992 சனிக்கிழமை காலை கல்லூரியில் நடைபெறும். தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்புவோர், கல்லூரி அலுவலகத்தில் ரூபா 40/- செலுத்தி உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி 06 — 11 — 1992 ஆகும்.

- அதிபர்.

யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(கி-3637)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 05 — 08 — 1903

இறப்பு: 29 — 09 — 1992

### அமரர் செல்லப்பா இராசையா

அன்பின் பிறப்பிடமாய், எங்கள் குடும்ப ஒளி விளக்காய், பாசத்தின் உறைவிடமாய், செயற்திறன் மிக்கவராய் திகழ்ந்த எம் அப்புத் தெய்வமே! உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டு அகலாது.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன், பேர்த்திகள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(23053)

## பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை - பளை

## சந்தை இறைச்சிக் கடைகளுக்கான
## கேள்வி அறிவித்தல் - 1993

1. பச்சிலைப் பள்ளிப் பிரதேச நிருவாக எல்லைக்குள் உள்ள பின்வரும் 'சந்தை' இறைச்சிக் கடைகளை 1993 ஜனவரி 1ஆம் திகதி முதல் 31 டிசம்பர் 1993வரை குத்தகைக்கு ஏற்று நடத்துவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 10-11-92ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை இப் பிரதேசசபையில் கேள்விப் பத்திரப் பணத்தையும் கேள்வி வைப்புப் பணத்தையும் செலுத்தி 06-11-92 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 12-11-92 பிற்பகல் 1-30 மணிக்கு திறக்கப்படும்.
2. கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை 'விசேட ஆணையாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை' என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை பி. உ. உ. ஆணையாளர், கிளிநொச்சி என்ற முகவரிக்கும் நேரிலோ, பதிவுத் தபால் மூலமாகவோ சேர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் 1993 குத்தகைகள் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக நடத்து கொள்வதுடன் சபையின் அவ்வப்போதைய நடைமுறைகளுக்கும் இணங்கிக் கொள்ள தயாராக இருத்தல் வேண்டும். போதிய காரணங்களுக்காகக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, பின் போடவோ, நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

| இல | குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கே/பிணைப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 1. | பளை பொதுச் சந்தை | 100-00 | 250-00 | 25,000-00 |
| 2. | பளை சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100-00 | 250-00 | 55 000-00 |
| 3. | பளை சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100-00 | 250 00 | 3,000-00 |
| 4 | முகமாலை சந்தை | 50-00 | 100-00 | 1,000-00 |
| 5. | முகமாலை மாட்டிறைச்சிக் கடை | 50-00 | 100-00 | 10,000-00 |

செல்வி கு. அன்னமயில்,
விசேட ஆணையாளர்.

பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபை,
பளை.
26-10-1992.

(கி-3632)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 02 — 03 — 1937

இறைவன் அடியில்: 05 — 11 — 1986

அமரர்

### செல்லத்துரை சுப்பிரமணியம்

[இராவணன்]

திதி: 29 — 10 — 1992

அன்பின் திருவுருவே, அசையாத சுடர்மணியே!
ஆறாண்டு சென்றாலும் ஆறாது எங்கள் கவலை
நீங்கள் வளர்த்த செடிகள் எல்லாம் செழித்தே நிற்கிறது - ஆனால்
நீங்கள் நினைத்த காரியங்கள் - நிலைகுலைந்து விட்டனவே!
தங்கள் ஆசி இருக்கும் வரை நாங்கள் ஒருபோதும் தயங்கமாட்டோம்.
உங்கள் சாந்திக்கு நல்லூரான் அருள் புரிவான்.

தங்கள் பிரிவால் வாடிவதங்கும்;
மனைவி, பெறாமக்கள்.

511, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(23056)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இருண்ட காலத்தை தொட்டுக் காட்டுகிறது

கொழும்பில் இம்மாதம் இருபத்து மூன்றாம் திகதி நடந்த "கறுப்பு வெள்ளி" ஹர்த்தால் எதிர்பார்க்கப்பட்டது போலவே வன்செயல்களிலும் குழப்பத்திலும் முடிந்தது. "கறுப்பு வெள்ளி யுத்தம்" என்று கொழும்புப் பத்திரிகைகள் வர்ணிக்கும் அளவுக்கு மோதல்களும், வன்செயல்களும் தீவிரமடைந்திருந்தன. ஒரு நாட்போரில் தமிழர்களுக்குப் பெரும் பாதிப்புகளும், நஷ்டங்களும் உண்டாக்கப்பட்டன.

ஹர்த்தால் என்ற அகிம்சை வழி வன்செயலாக உருவெடுத்தமைக்கு யார் காரணம்? இயக்கத்தை ஆரம்பித்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்களா? பொதுவான முஸ்லிம்களா? தருணம் பார்த்திருந்த காடையர்களா? எதிர்க்கட்சிகளின் கை மறைமுகமாகப் படிந்துள்ளதா? அரசாங்க ஆதரவாளர்கள் அல்லது அவர்களின் கைக்கூலிகள் மருதானைப் போரின் சூத்திரதாரிகளா?

இத்தகைய பல கேள்விகள் எழுந்துள்ளன. கலவரம் முடிந்த கையோடு ஒருவர் மற்றவர் மீது குற்றஞ்சாட்டும் படலமும் ஆரம்பமானது. கலவரத்தில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்டு 32 பேர் கைது செய்யப்பட்டு, விசாரணை செய்யப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் யுத்தத்தை நடத்திய சூத்திரதாரிகள் யார் என்று நிறுவும் விதத்தில், அறிந்து கொள்ளும் விதத்தில் இன்னும் விசாரணை விவரங்கள் வெளியிடப்படவில்லை.

கைது செய்யப்பட்ட 32 பேர் மீது அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. வழக்கு விசாரணை நடக்கும் போது தான் மருதானை யுத்தத்துக்குச் சூத்திரதாரிகள் யார், அதில் பங்குபற்றியவர்கள் யார் என்ற விவரங்கள் தெரிய வரலாம். வழமைபோல அதற்குப் பல காலம் செல்லும்!

ஆனால் கறுப்பு வெள்ளி யுத்தம் பின்வரும் பிரதான அம்சங்களைப் புரிய வைத்துள்ளது.

★ கொழும்பில் தமிழர் - முஸ்லிம்கள் இனக் குழப்பம் ஒன்றைத் தூண்டும் முயற்சியாகத் தான் ஹர்த்தால் ஆரம்பிக்கப்பட்டது.

★ முஸ்லிம்கள் எப்படித் தான் சிங்களவரோடு, சிங்கள அரசியல் கட்சிகளோடு ஒட்டி உறவாடினாலும், முஸ்லிம்கள் பலசாலிகள் என்று நினைக்க சிங்களவர்கள் — சிங்கள அரசியல் கட்சியினர் — சிங்கள அரசினர் — இடம் கொடுக்க மாட்டார்கள். முஸ்லிம்களின் மெத்தனப் போக்கைச் சிங்களவர்கள் சகித்துக் கொள்ள மாட்டார்கள்.

★ முஸ்லிம்கள் தமிழர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தினால் அது அவர்களைத் தமிழர் தரப்பில் இருந்து தூர நிறுத்தி வைத்துப் பகைவராக்கும். சிங்களத் தரப்பினரும் வேண்டாத தொல்லை தரும் சக்தி என்று ஒதுக்கிவிட அல்லது அடக்கி வைக்கத் தூண்டும்.

இந்த அம்சங்களை ஆழமாக ஆராயின் முஸ்லிம்களின் போக்கு இனப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் ஒரு நிலைக்கு இட்டுச் செல்வதைப் புரிந்து கொள்ளலாம்.

★ சிங்களவர் — தமிழர் மோதல், போர்.

★ முஸ்லிம்கள் — தமிழர் மோதல், போர்.

★ சிங்களவர் — முஸ்லிம்கள் மோதல், போர்.

இத்தகைய ஒரு முப்பரிமாணச் சிக்கல் நிறைந்த, கழற்றி எடுக்க முடியாத ஒரு பின்னலை உருவாக்கும்.

மருதானைக் கலவரம் — கறுப்பு வெள்ளி யுத்தம் — இருண்ட எதிர்காலத்தைத் தொட்டுக் காட்டுவதாக உள்ளது. இனப்பிரச்சினை தீராமல், இலங்கை முழுவதிலும் மேலும் பல வருடக் கணக்காக இரத்த ஆறு ஓடுவதற்குக் கருக்கட்டுகிறது என்று கூடச் சொல்லலாம்.

எனவே இதனை ஓர் அபாய அறிகுறியாகக் கருதி, சிங்களவர், முஸ்லிம்கள், தமிழர்கள் ஆகிய முத்தரப்பினரும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது அவசியம்.

# கிளிநொச்சிப் பகுதியில் விமானத் தாக்குதல்கள்

கிளிநொச்சி, அக். 29

கிளிநொச்சி பகுதியில் கடந்த வாரம் பரவலாக விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

கடந்த புதன்கிழமை 21 ஆம் திகதி காலை 10 மணியளவில் இரு பொம்மர் விமானங்கள் இரணைமடு சந்திக்கு அண்மையில் உள்ள தொலைத் தொடர்பு கோபுரத்துக்கு முன்னால் உள்ள குடியிருப்பினை நோக்கி குண்டுகளை வீசின.

குண்டு வீச்சினால் ஒரு பெண் படுகாயம் அடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

மீண்டும் கடந்த சனிக்கிழமை பகல் 12 மணி அளவில் பரந்தன் பகுதியில் விமானக்குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

அதனால் சில வீடுகள் சேதமடைந்தன. (இ-76)

## மட்டக்களப்பில் பலியானோர் எண்ணிக்கை 10 ஆக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், அக். 29

மட்டக்களப்பில் கடந்த சனியன்று இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை பத்து என அறிவிக்கப்பட்டது.

பாலையடிவெட்டை, வெல்லாவெளி ஆகிய முகாம்களில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் காக்காச்சிவெட்டை, மலர்ச்சேனை ஆகிய இரு தமிழ் கிராமங்களையும் சுற்றிவளைத்தனர்.

அச்சமயம் அங்கு அவர்கள் நடத்திய வெறியாட்டத்திலேயே பத்துத்தமிழர்கள் உயிரிழந்தனர். உயிரிழந்தோர் எண்ணிக்கை 6 என்று முதலில் செய்தி வெளிவந்திருந்தது.

சுற்றிவளைப்பின் போது இராணுவத்தினர் தமிழர்களின் வாழ்விடங்கள் மீது ஷெல்களை ஏவியும், துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடத்தினர் என்றும்—

பின்னர் தமிழர்கள் பத்துப் பேர் கத்தியால் வெட்டியும் குத்தியும் படுகொலை செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர்களில் ஆண்களும் பெண்களும் அடங்கியுள்ளனர். பலர் அந்த சம்பவத்தில் காயமடைந்தனர்.

## ராகு, கேது மாற்றம்

யாழ்ப்பாணம், அக். 29

இன்று 29 ஆம் திகதி பின்னிரவு 5.30 மணியளவில் ராகு, கேதுக்கள் முறையே விருச்சிக, இடப ராசிகளுக்கு மாற்றமடைகின்றன.

இவை ஒன்றரை வருடங்களுக்கு உச்ச நீச சஞ்சாரஞ் செய்யும். (அ)

## ஷெல் வீச்சால் நால்வர் காயம்

அளவெட்டி, அக். 29

நேற்றுக்காலையும் மாலையும் இடம் பெற்ற ஷெல் வீச்சுக்களினால் அளவெட்டியிலும் ஏழாலையிலும் நால்வர் காயம் அடைந்தனர்.

நேற்றுக் காலை ஏழாலையில் இடம்பெற்ற ஷெல் வீச்சினால் ஏழாலை வடக்கைச் சேர்ந்த பொன்னையா யோகேஸ்வரன் (வயது 33) ஏழாலை மத்தியைச் சேர்ந்த சிவரத்தினம் அருள்ராஜ் (வயது 17) ஆகியோர் காயமடைந்தனர்.

நேற்று மாலை அளவெட்டி கிழக்கு கும்பளை வயல் வெளியில் விழுந்த ஷெல்லினால் வயலில் நாற்று நடுகையில் ஈடுபட்டிருந்த கும்பளையைச் சேர்ந்த அர்ச்சுனன் பொன்னுத்துரை (வயது 53) நடராசா, ஜெகநாதன் (வயது 30) ஆகியோர் காயமடைந்தனர். (இ-15-13)

## ஸ்ரீலங்கா ஜனாதிபதியாக மீண்டும் பிரேமா வருவார்

### லண்டன் பத்திரிகை ஆருடம்

கொழும்பு, அக். 29

"ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா மீண்டும் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியாவார்".

இப்படி ஆருடம் கூறியுள்ளது லண்டன் 'பினான்சியல் ரைம்ஸ்'.

ஜனாதிபதி பிரேமதாஸா இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாக வரக்கூடிய வாய்ப்பு உறுதியாகியுள்ளது என்றும் —

ஸ்ரீலங்காவின் அரசியல் உறுதிப்பாடு நல்ல நிலைக்குத் திரும்பியுள்ளது. அது ஒரு கைத்தொழில் நாடாக பரிணமிக்கும் நிலைக்கு தலை தூக்கி வருகிறது என்றும்—

'பினான்சியல் ரைம்ஸ்' ஆய்வுக் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

# இலங்கை தேயிலையை பகிஷ்கரியுங்கள்

### பிரிட்டிஷ் பத்திரிகையில் விளம்பரம்

கொழும்பு, அக். 29

பிரிட்டிஷ் மக்கள் இலங்கைத் தேயிலையை வாங்கக் கூடாது என்று கோரும் விளம்பரங்கள் லண்டனில் பிரசுரமாகும் கார்டியன் மற்றும் டெய்லி ரெலிகிராப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கிறிஸ்தவ உதவி ஸ்தாபனம் ஒன்று இவ் விளம்பரங்களை வெளியிட்டுள்ளது.

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர் வாழும் இடிந்து விழும் நிலையில் காணப்படும் லயன் அறைகளின் படத்துடன் இவ் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

"கிலோ கணக்கில் தேயிலைக்கொழுந்துகளைப் பறிக்கும் இத் தொழிலாளர்கள் தினசரிக் கூலியாக வெறும் 70 பென்ஸ்தான் பெறுகின்றார்கள். ஆனால் ஒரு கிலோ தேயிலை பத்து மடங்கு விலையில் விற்கப்படுகிறது"—

இப்படி இவ் விளம்பரங்களில் கூறப்பட்டுள்ளது.

# ஹெரோயினை விழுங்கி கடத்த முயன்ற மூதாட்டி!

கொழும்பு, அக். 29

முன்னூறு கிராம்களுக்கு அதிகமான ஹெரோயினை 51 குளிசைகளாக மாற்றி (Pellets) அவற்றை விழுங்கிக் கொண்டு வந்த 60 வயதான முஸ்லிம் மூதாட்டி ஒருவரை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து போதைத் தடுப்பு பொலீஸார் கடந்த வெள்ளி அன்று கைது செய்தனர்.

உடனடியாக நீர்கொழும்பு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்ட அப்பெண்ணுக்கு அங்கு வைத்து பேதி மருந்து கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 51 ஹெரோயின் குளிசைகளும் மீட்கப்பட்டன. அவற்றின் வெளிச் சந்தை விலை ஐந்து லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டது.

சந்தேகநபர் பின்னர் நீர்கொழும்பு நீதிவான் முன்னால் ஆஜர் செய்யப்படுவதற்காகத் தடுத்து வைக்கப்பட்டார். (உ-எ)

## நோர்வே செஞ்சிலுவை போசாக்கு உணவு வழங்கும்

### 55 லட்சம் ரூபா திட்டம் அமுல்

யாழ்ப்பாணம், அக். 29

யுத்தத்தின் காரணமாகப் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மாருக்கும் போசாக்கு உணவு வழங்கும் திட்டம் ஒன்றை நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் நடைமுறைப்படுத்த உள்ளது.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கென 55 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை அமுல் செய்வதற்கு முன்னோடியாக வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள போசாக்கின்மைப் பாதிப்புச் சம்பந்தமான விவரங்களை நேரில் அறிவதே இப்போது யாழ்ப்பாணம் வந்துள்ள நோர்வே செஞ்சிலுவைச் சங்கத் தூதுக்குழுவின் பிரதான நோக்கமாகும்.

சங்கத்தின் தலைவர் திரு. ஆர். இவான்ஸ், வைத்திய விவகார அதிகாரி டாக்டர் லார்ஸ் நாசன் ஆகிய இருவர் அடங்கிய தூதுக்குழு போசாக்கின்மை பாதிப்புப் பற்றிய விவரங்களை கடந்த இரண்டு நாட்களாக நேரில் கேட்டறிந்தனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை, வடபிராந்திய சுகாதார அத்தியட்சகர், யாழ். மாநகர சபை வைத்திய அதிகாரி, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சமூக விஞ்ஞான பீட அதிகாரிகள் ஆகியோருடன் தூதுக்குழுவினர் கலந்துரையாடி விவரங்களைக் கேட்டறிந்தனர்.

போசாக்கு உணவு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த 55 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும்—

வடமாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் விவரங்கள் திரட்டப்பட்டதும், பிரஸ்தாப திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும்— இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி திரு தயான தேவா உதயனுக்குத் தெரிவித்தார். (அ-3)

## லலித் கட்சியிலிருந்து றொனி மனைவி விலகினார்

### அனுரா அணியில் சேரலாம்

கொழும்பு, அக். 29

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டீ மெல்லின் மனைவி திருமதி மல்லிகா டீ மெல் தாம் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து உடனடியாக விலகுவதாக நேற்று முன்தினம் கொழும்பில் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இவர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய உறுப்பினராகக் கருதப்பட்டவர்.

திரு. றொனி டீ மெல் நாட்டில் இல்லாத காரணத்தால் அவரின் மனைவி மல்லிகா டீ மெல்லுக்குக் கட்சியில் முக்கிய இடம் வழங்கப்பட்டிருந்தது.

இதே சமயம் திருமதி மல்லிகா டீ மெல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனுரா அணியில் சேர இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் —

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய பிரமுகரான சரத் பெரேராவும், அம்முன்னணியில் இருந்து இராஜினாமாச் செய்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ-10)

## தமிழுடன் ஆங்கிலமும் கற்பது மிக அவசியம்

### பரிசளிப்பு விழாவில் அரச அதிபர்

யாழ்ப்பாணம், அக். 29

ஆங்கில மொழி உலக மொழி என்பதையும் வெளி உலகத் தொடர்புகளுக்கு அது வழி வகுக்கிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. எனவே தமிழுடன் ஆங்கிலத்தையும் மாணவர்கள் அத்தியாவசியமாகக் கற்க வேண்டும்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் யாழ். அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிப் பிரதேசச் செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளையும், கௌரவ விருந்தினராக தென்மராட்சி பிரதிப்பணிப்பாளர் திரு. பொ. இரகுநாதனும் கலந்து கொண்டனர்.

கல்லூரி அதிபர் திரு. க. சந்திரசேகரம் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

அரச அதிபர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், மாணவர்கள் புத்திஜீவிகளாக வருவதற்கு பெற்றோரும், ஆசிரியர்களும் தனித்தனியே பங்களிப்பு செய்ய வேண்டும் என்றார்.

விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (இ)

## ஆண்டு - 6 அனுமதிக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரபல்ய பாடசாலைகளிலும், தேசிய பாடசாலைகளிலும் தமது பிள்ளைகளைச் சேர்க்க விரும்பும் பெற்றோர் சம்பந்தப்பட்ட பாடசாலையிலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து கொடுக்கவேண்டும்.

பாடசாலைகள் ஒவ்வொன்றும் தமக்கு வசதியான நாளை விண்ணப்ப முடிவு திகதியாக நிர்ணயித்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் பிரபல்ய பாடசாலைகளாக அங்கீகரிக்கப்பட்ட 25 பாடசாலைகள் வருமாறு:-

யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ். இந்து மகளிர், கொக்குவில் இந்து, யாழ். மத்திய கல்லூரி, கனகரத்தினம் ம. ம. வி., கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, வயாவிளான் ம. ம. வி., இராமநாதன் மகளிர் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி.

யூனியன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்து, சாவகச்சேரி டிறிபேக், நெல்லியடி ம. ம. வி., நெல்லியடி மகளிர், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்ற் கல்லூரி

வட இந்து மகளிர் கல்லூரி,

★ வேலணை வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வி. திருக்குடும்பக் கன்னியர் மடம்,

★ புனித ஹென்றியரசர் கல்லூரி

★ இளவாலைக் கன்னியர் மடம்.

(★ இப்போது இயங்கவில்லை).

## வெளிநாட்டு...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

திய பணிப்பாளர்கள் மருந்து, உபகரணங்கள், வாகனங்கள் ஆகியவற்றை நேரடியாக சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து பெற்று வருவதாகத் தெரியவந்துள்ளது—

இந்த வகையான உதவிகளை இனி அமைச்சின் ஊடாகவே பெறவேண்டும்— என்றும் அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம்

## நற்செய்தி கூட்டங்கள்

அருளுரையாளர்

## அருள்திரு கலாநிதி டயான்சந் கார்

**REV. DR. DHAYANCHAND CARR**

(உப அதிபர் தமிழ்நாடு இறையியல் கல்லூரி, மதுரை)

* 29 - 10 - 92 வியாழக்கிழமை மாலை 4.00 மணி தென்னிந்திய திருச்சபை ஆலயம், உடுவில்.
* 30 - 10 - 92 வெள்ளிக்கிழமை மாலை 4 00 மணி பரி பேதுரு மெதடிஸ்த ஆலயம், யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

(கி-3741)

## யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி

புத்தூர்.

## 1993 - ஆண்டு 6 அனுமதித் தேர்வு

**மேற்படி பரீட்சை 14 11 1992இல் நடைபெறும்.**

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் கல்லூரி அலுவலகத்தில் ரூபா 25/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்ப முடிவுத் திகதி: **03-11-1992**

பரீட்சைக்குத் தோற்றாதோர் அனுமதிக்கப்பட மாட்டார்.

அதிபர்.

(23069)

## கொக்குவில் இந்துக் கல்லூரி

## 1993 இல் ஆண்டு - 6 அனுமதிக்கான

## பிரவேசப் பரீட்சை

1. பரீட்சை நடைபெறும் திகதி 14-11-1992 சனிக்கிழமை
2. பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை 29-10-1992 வியாழக்கிழமையில் இருந்து ரூபா 15/- செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
3. பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை 04-11-1992 புதன்கிழமைக்கு முன் காரியாலயத்தில் கையளித்து பரீட்சைக்கான அனுமதியட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

\- அதிபர்.

(சி-3635)

## யாழ்ப்பாணம்

## வேம்படி மகளிர் கல்லூரி

## ஆண்டு - 6 அனுமதி பெறுவதற்கான

## பிரவேசப் பரீட்சை - 1993

1. இப்பரீட்சை **15-11-1992** ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.
2. தற்போது ஆண்டு 5இல் கல்வி கற்கும் **01 02 1982**க்குப் பின் பிறந்த மாணவர்கள் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர்.
3. பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் ரூபா 30/- செலுத்தி **30 10 1992** வெள்ளிக்கிழமை தொடக்கம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் இக்கல்லூரியில் நேரில் **06 11-1992** வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகக் கையளிக்கப்படல் வேண்டும். (06-11-1992க்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.)
5. இக்கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
6. இடைக்கப் பெற்ற விண்ணப்தாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரங்களை கல்லூரியில் **11 - 11 - 1992** புதன்கிழமை நேரில் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அதிபர்,
க. இராஜரட்ணம்.

யாழ்ப்பாணம்-
வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
1992-10-28.

(கி-8738)

## அறிவித்தல்

யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆண்டு 6 அனுமதிப் பரீட்சைக்கான விண்ணப்பக் கட்டணம் ரூபா 15/-

தி. நாகராஜா
அதிபர்

(சி/3639)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், அக். 29

யாழ் மிட் ரவுண் றோட்டறக்ட் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு வாலையூர் சென். அந்தனிஸ் கழக அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி கழக அணி மோதும்.

இந்த ஆட்டம் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (உ)

## சண்டிலிப்பாயில்

யாழ்ப்பாணம், அக். 29

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் வேலை ஆரம்பமாகி உள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் பணிப்பின் பேரில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் (ரீ.ஆர்.ஆர்.ஓ) ஆதரவுடன் இது நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து எதிர்வரும் 3-ஆம் திகதிவரை சண்டிலிப்பாய் பிரதேசத்தில் உள்ள அகதி முகாம்கள் உட்பட பல இடங்களிலும் கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் பணி நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## ஜி.சி.ஈ. சாதாரண தர பரீட்சை டிச.7இல்

கொழும்பு, அக். 28

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 7ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

5 லட்சத்து 22 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுவார்கள். இவர்களில் 3 லட்சத்து 22 ஆயிரம் பேர் பாடசாலை பரீட்சார்த்திகள் ஆவர்.

சுமார் 3 ஆயிரத்து 500 நிலையங்களில் இப் பரீட்சை நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் ஆதர் வெதமுனி தெரிவித்தார். (ஓ-எ)

## இலக்கிய அவை

குருநகர், அக். 29

யாழ் திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவை அமர்வு வழமைபோல் நாளை 30ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

யாழ் பிரதான வீதி கலாமன்றக் கேட்போர் கூடத்தில் அன்றைய தினம் மாலை 4-30 மணிக்கு மேற்படி அமர்வு நிகழும்.

திரு. இரா செல்வவடிவேல் 'பட்டிமன்றம்' என்னும் தலைப்பில் இலக்கிய சொற்பொழிவை நிகழ்த்துவார். (ஓ 51)

## படையினர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 28) என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தம்முடன் படகில் வந்த மற்றைய படகோட்டியான நவம் என்பவர் சூட்டுக்காயங்களுக்கு உள்ளாகி இருக்கலாம் அல்லது படையினரிடம் பிடிபட்டிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

கட்டைக்காட்டைச்சேர்ந்த வெனிஸ்லாஸ் ஞானம் என்பவர் தெரிவித்ததாவது:-

நெல் ஏற்றி வந்த படகில் நானும் ஜேம்ஸ் வெனிஸ்லாஸ் என்பவரும் வந்து கொண்டிருந்த போது படையினர் திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

படகின் வாயைத் துளைத்துக்கொண்டு சன்னங்கள் சென்றன.

நாங்கள் படகில் இருந்து பாய்ந்து நீந்தி மறுநாள் காலை ஆறத்திநரி கடற்கரையை அடைந்தோம்.

— இப்படி அவர் கூறினார். (இ-117)

## மண்எண்ணெய்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பவர் இச்சம்பவத்தின்போது காணாமற்போய்விட்டனர்.

இரு படகுகளையும் சேர்ந்த ஏனைய மூன்று படகோட்டிகளான மருதங்கேணி, வத்திராயனைச் சேர்ந்த மு. அழகன் (வயது 28) கட்டைக்காட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் வெனிஸ்லாஸ், வெனிஸ்லாஸ் ஞானம் ஆகியோர் நீந்தித் தப்பினர் [illegible]

(இ-117)

## யா/யூனியன் கல்லூரி (தெல்லிப்பளை)

மருதனார்மடம்

## ஆண்டு 6 அனுமதி பெறுவதற்கான

## பிரவேசப் பரீட்சை - 1993

1. பரீட்சை நடைபெறும் திகதி: 1992-11-14.
2. தற்போது ஆண்டு 5 இல் கல்வி கற்கும், 1982-02-01 திகதிக்குப் பின் பிறந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
3. விண்ணப்பப் படிவங்களை கல்லூரிக் காரியாலயத்தில் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.
4. பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை 1992-11-05 திகதிக்குப் பிந்தாமல் கல்லூரிக் காரியாலயத்தில் சேர்ப்பிக்கவும்.
5. பரீட்சைக்கான அனுமதி அட்டையை 1992-11-11 புதன்கிழமை கல்லூரிக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(C/2513)

அதிபர்

## மரண அறிவித்தல்கள்

### கதிரன் செல்லர்

(சின்னத்துரை)

அச்சுவேலி வடக்கு பாடசாலை ஒழுங்கையில் வசிப்பவரான கதிரன் செல்லர் 28-10-92 புதன்கிழமை காலமானார்.

அன்னார் சரசுவின் அன்புக் கணவரும், ஜெயக்குமார் (லக்சாசிமெந்து), சாந்தகுமார் (பிரான்ஸ்), ஜெயந்தினி, உதயகுமார் (பிரான்ஸ்), சுதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராணியின் மாமனாரும், சுந்தையா, செல்லம்மா, குழந்தை ஆகியோரின் அன்புச் சகோதரரும், வினோத்திகாவின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (28-10-92) மாலை 3 மணியளவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. ஜெயக்குமார்.
(மகன்)

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி,

(23061)

### திருமதி இராசலட்சுமி சிவரத்தினம்

திருமதி இராசலட்சுமி சிவரத்தினம் 27-10 92 இல் காலமாகிவிட்டார். இவர் சிவரத்தினத்தின் அன்பு மனைவியும், ரத்தினசிங்கம், சிவமணி, சிவராஜினி, சிவராஜேஸ்வரன், காலஞ்சென்ற சிவதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், ஞானமணி, சுப்பிரமணியம், கோவிந்தராஜா, தமயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், யசோதா, சுசித்திரா, நிரோஷன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் 29 10-1992 வியாழக்கிழமை பி. ப. 2 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சி. சிவராஜேஸ்வரன்.
(மகன்)

கோட்டன் வீதி,
மானிப்பாய்.

(23068)

### சபாபதிப்பிள்ளை நடராசா

அராலி தெற்கை சேர்ந்த சபாபதிப்பிள்ளை நடராசா 28-10-92 இல் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை - சிவகாமிப்பிள்ளையின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ரவீந்திரன் (சிங்கப்பூர்), சசிகரன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வதனியின் அன்பு மாமனாரும், குஞ்சிதபாதம், ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், புறோக்டர் கந்தையா - சிவநாயகத்தின் மூத்தமருமகனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
சிவபுண்ணியமூர்த்தி
(மைத்துனர்)

அராலி தெற்கு

(23073)

வேலணை - நாவலடிப்புலம், கரம்பன் கிழக்கைச் சேர்ந்த

### சபாரத்தினம் தனபாலசிங்கம்

கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வேலணை கிழக்கில் திருமணஞ் செய்தவரும், இப்பொழுது கனடாவில் வசித்தவருமாகிய சபாரத்தினம் தனபாலசிங்கம் அவர்கள் 22 - 10 - 1992 வியாழக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், இலட்சுமி ஆகியோரின் அன்பு மகனும், தர்மாவதியின் அன்புக் கணவரும், சுஜேந்திரன், ஜிபானி என்பவர்களின் அன்புத் தந்தையும், வசந்தா, சாந்தா (ஆசிரியை), கீதா, ராதா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுபத்தன், சுயனி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற வேலணை கிழக்கு அமிர்தலிங்கம் அவர்களினதும், நித்தியலட்சுமி அவர்களினதும் அன்பு மருமகனும், ரவி, கலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், இராசதுரை, மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

தகவல்:
திருமதி திருநாவுக்கரசு இராசம்மா
மாமியார் (மண்கும்பான்)

ச. கைலாயபிள்ளை
முன்னாள் அதிபர்
144/4 பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(23072)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org